
උපරිමාධිකරණ සංකීර්ණ කළමනාකරණ මණ්ඩලය

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபை

SUPERIOR COURTS COMPLEX BOARD OF MANAGEMENT



2022

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

2022ஆம் ஆண்டிற்கான மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையின் ஆண்டறிக்கை

2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையின் முப்பத்து ஐந்தாவது (35) ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் முகாமை சபை மகிழ்வடைகின்றது.

அறிமுகம்

முகாமை சபையானது மீயுயர் நீதிமன்றங்களையும் மற்றும் அவற்றின் கட்டடங்களையும் கட்டுப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல் என்பதோடு கட்டடத் தொகுதியின் வசதிகளை மேம்படுத்துவதற்கு அத்தகைய சேர்த்தல்கள், திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் பணிகளைச் செய்தல் போன்ற நோக்கங்களுடன் 1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தினால் மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையால் உரித்தளிக்கப் பட்டவாறு முகாமை சபை நியமிக்கப்பட்டது.

சொல்லப்பட்ட சட்டத்தின் 3(1) ஆம் பிரிவுக்கு ஏற்ப முகாமை சபையானது பின்வரும் அங்கத்த வர்களை உள்ளடக்குகின்றது:-

(i) கௌரவ பிரதம நீதியரசர்

(ii) கௌரவ பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர்

(iii) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கௌரவ தலைவர்

(iv) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கெரவ தலைவரினால் நியமிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஒருவர்.

(v) நீதியமைச்சின் செயலாளர்.

(vi) வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர்.

(vii) இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர்.

(viii) கொழும்பு மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளர்

(ix) நிதியமைச்சின் பிரதிநிதி ஒருவர்.

(x) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

வாரியத்தின் போது துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டனர் - 2022

(1) துறை கொள்முதல் குழு

(i) டபிள்யூ.டி.எல்.பி. விக்கிரமசிங்க - தலைவர்
(ii) எஸ்.எம்.யு.எஸ். சமரக்கோன் - உறுப்பினர்
(iii) டி.டி.என். பெர்னாண்டோ - உறுப்பினர்
(iv) கே.ஏ.டி.யு. பீரிஸ் - செயலாளர்
(v) ஏ.எம்.சி. தில்ருக்ஷி சில்வா - மாற்று உறுப்பினர்

(2) சிறு கொள்முதல் குழு

(i) டப்.டீ.எல்.பீ. விக்ரமசிங்க - தலைவர்
(ii) டி. சஜீவன் - உறுப்பினர்
(iii) கே. ஹப்புஆராச்சி - உறுப்பினர்
(iv) ஈ.டி.எல். பிரேமஜித் - செயலாளர்
(v) பொருட்கள் வெரகம - மாற்று உறுப்பினர்
(vi) ஐ.யு. கொடித்துவக்கு - மாற்று உறுப்பினர்

(3) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

(i) விஷயங்கள் வெரகம - தலைவர்
(ii) எச்.டபிள்யூ. அனுர - உறுப்பினர்
(iii) I.P.L. சசிந்தா - உறுப்பினர்
(iv) ஐ.எம். இன்ஷாஃப் - உறுப்பினர்
(v) I .U. குறியீடு - உறுப்பினர்

(4) ஏல தொடக்கக் குழு

(i) எஸ்.வி.கே.டி சில்வா - உறுப்பினர்
(ii) I.U. குறியீடு - உறுப்பினர்
(iv) மூத்த மேலாண்மை உதவியாளர் - உறுப்பினர்
ஏலக் கோப்பு தொடர்பான பிரிவு

முகாமை சபையின் அங்கத்தவர்கள் ஓய்வுபெறுதல், பதவி விலகல் மற்றும் நியமித்தல் வருடம் 2022 :-

20.01.2022	நிதியமைச்சின் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக் களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி திரு. ஏ.வீ. ஜனதர என்பவருக்கு பதிலாக நிதியமைச்சின் சட்ட அலுவல்கள் திணைக் களத்தின் மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதி (பதில் கடமை) திரு. ஏ.கே.கே.டீ. அரந்தர அவர்கள் முகாமை சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
30.05.2022	நிதியமைச்சின் செயலாளர், திரு. எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே என்பவருக்கு பதிலாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கள் அமைச்சின் செயலாளர் திருமதி வசந்தா பெரேரா அவர்கள் முகாமை சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
02.06.2022	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. பீ.ஏ.ஐ. சிரிநிமால் பெரேரா என்பவருக்கு பதிலாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. பிரதீப் ரத்நாயக அவர்கள் முகாமை சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
30.06.2022	கொழும்பு மாநகர சபையின் மாகாண ஆணையாளர் திருமதி ரொஷானி திசாநாயக முகாமை சபையின் அங்கத்தவராக 2020.06.31 முதல் 2022.06.30 ஆம் திகதி வரை கடமையாற்றி விட்டு அவர் கலாநிதி (PhD) கற்கையைப் பூர்த்தி செய்வதற்காக நாட்டை விட்டு வெளியேறினார்.
22.11.2022	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. பிரதீப் ரத்நாயக என்பவருக்கு பதிலாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. டப்லியூ.எஸ். சத்யாநந்த அவர்கள் முகாமை சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

மேல் நீதிமன்ற வளாகம்

மேலாண்மை வாரியம்



தொலைநோக்கு அறிக்கை

நாட்டின் சிறந்த நிர்வகிக்கப்படும் சட்டப்பூர்வ வாரியமாக உயர் நீதிமன்ற வளாக மேலாண்மை வாரியத்தை மேம்படுத்துவதே மேலாண்மை வாரியத்தின் பார்வை.

குறிக்கோள் வாசகம்

உயர் நீதிமன்ற வளாக மேலாண்மை வாரியத்தின் பணி, தற்போதுள்ள கட்டிட வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பைப் பராமரித்து மேலும் மேம்படுத்துவதாகும், இதன் மூலம் நீதித்துறை மற்றும் சட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இந்த வசதிகளைப் பயன்படுத்தி அவர்களின் செயல்பாடுகளைச் செய்ய மிகவும் சாதகமான சூழலை வழங்க முடியும். வழக்குரைஞர்களுக்கு திறமையான, நியாயமான மற்றும் நியாயமான சேவையை வெளிக்கொணரும் மற்றும் அதன் மூலம் மேற்கண்ட பார்வையை அடைவதற்கான ஒரு பார்வை.

பொருள் அறிக்கை

உயர் நீதிமன்ற வளாகம் மற்றும் அதிலுள்ள கட்டிடங்களைக் கட்டுப்படுத்துதல், நிர்வகித்தல், நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் வளாகம் மற்றும் அதன் கட்டிடங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான கூடுதல், மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகளைச் செய்வது வாரியத்தின் நோக்கமாகும்.

2022 இல் ஊழியர் நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் பதவி விலகல்கள்

தொடர் இல.	பதவி	நியமனம்	பதவி உயர்வுகள்	ஓய்வு பெறுதல்	பதவி விலகல்
1	உள்ளக கணக்காய்வு அலுவலர் தரம் - II	01	-	-	-
2	பராமரிப்பு அலுவலர் (மின்) ஒப்பந்தம் தரம் - II	-	-	01	-
3	முகாமைத்துவ உதவியாளர் தரம் - I	-		-	01
	தரம் - II	-	01	01	
	தரம் - III	-	-	-	-
4	பாதுகாப்பு உதவியாளர் தரம் - I	-	-	04	01
	தரம் - II	-	-	-	-
	தரம் - III	-	-	-	03
5	தொழில்நுட்பவியலாளர் (இலக்ட்ரொனிக்/இலக்ட்ரிகல்) தரம் - II	-	01	-	-
	தரம் - III	-	-	-	01
7	அலுவலக உதவியாளர் தரம் - I	-	-	01	-

நன்றி :-

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமை சபையானது பின்வருவோர்களுக்கு அவர்களின் உதவிக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

- நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு சீராக்கல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்கள்.
- திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதியமைச்சின் ஊழியர்கள்.
- உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் மற்றும் ஊழியர்கள்.
- மேன் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் மற்றும் ஊழியர்கள்.
- நகர அபிவிருத்தி அதிகாரசபை
- அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்
- சுகாதார மருத்துவ அலுவலர் மற்றும் அவரின் ஊழியர்கள் மாநகர ஆணையாளர்
- இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
- மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகர சபை
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் ஏனைய அலுவலர்கள்.
- மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையின் சகல அங்கத்தவர்கள்.

மேஜர் ஜெனரல் டப்.டீ.எல்.பீ. விக்ரமசிங்க (ஓய்வு பெற்ற)
மார்ஷல்/பிரதான நிறைவேற்று அதிகாரி
மீயுயர் நீதிமன்றங்கள் கட்டடத் தொகுதி முகாமை சபை.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் செயற்பாடுகள்:-

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதியின் பொதுக் கட்டுப்பாடு, நிருவாகம், முகாமை மற்றும் பராமரிப்பு என்பவற்றுக்கு மேலதிகமாக, 2022 ஆம் ஆண்டில் பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

(1) மூலதனச் சொத்துக்களின் கட்டடம் மற்றும் அமைப்பு:-

- பதிவுக் களஞ்சியக் கட்டடத்தின் கூரை வேலை திருத்தம் மற்றும் புதுப்பித்தல்
- நீதிபதிகள் அடுக்குமாடியில் கூரை நீர்க் கசிவு மற்றும் பீலிகள் என்பவற்றை புதுப்பித்தல் மற்றும் திருத்துதல்
- நீதி சேவை பிரிவின் கொள்கலன்களின் மேலதிக வேலைகள்

(2) நிலையான சொத்துக்கள் கொள்வனவு

(i) அலுவலகப் பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் கொள்வனவு:-

- 107ஆம் இலக்க நீதிமன்றத்திற்கு தேக்கை மரத்திலான சாட்சிக்கூண்டொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(ii) அலுவலக உபகரணங்கள் கொள்வனவு

- பொறியியல் மற்றும் பாதுகாப்பு பிரிவுக்கு 02 பிரதியெடுத்தல் இயந்திரங்கள் கொள்வனவு
- நிறைவேற்று அலுவலர் கதிரைகள் 02 மற்றும் கணனிக் கதிரை 01 கொள்வனவு.
- இரு துளைகள் கொண்ட துளை கருவியொன்று (Puncher machine) கொள்வனவு
- களஞ்சியசாலைக்கு இருபுற ஏணியொன்று கொள்வனவு
- இரண்டு உருக்கு அலுமாரிகள் கொள்வனவு.
- பொருள்பெறுகை பிரிவிற்கு பிரதியெடுத்தல் இயந்திரம் 01 கொள்வனவு செய்யப்பட்டது.
- கணனி மேசை ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.
- ஒரு கணனி அச்சுப்பிரதி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது.
- லேசர் வகை கணனி அச்சுப் பிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.
- பூட்டுப் போடக் கூடிய 02 உருக்கு அலுமாரிகள் கொள்வனவு செய்யப்பட்டன.
- இரண்டு எல்ஈடி தொலைக்காட்சிகள் கொள்வனவு செய்யப்பட்டன.
- நீதிமன்ற அறைகளுக்கு (502, 503, 403, 404) 04 தடையற்ற மின் விநியோகிப் பான்கள் (UPS) கொள்வனவு செய்யப்பட்டன.
- 4 இலாச்சுக்களைக் கொண்ட கோவை அலுமாரி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(iii) அலுவலகக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு

- பொறியியல் பிரிவுக்கான சுமந்து செல்லக் கூடியமின் துரப்பனம் 01 கொள்வனவு.
- பொறியியல் பிரிவுக்கான கம்பியில்லா மின்சார துரப்பணம் 01 கொள்வனவு.
- பொறியியல் பிரிவுக்கான டிஜிட்டல் மற்றும் அனலொக் மல்டி மீட்டர் 02 கொள்வனவு.

(iv) பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் கொள்வனவு செய்து பொருத்துதல்:-

- மீயுயர் நீதிமன்றக் கட்டத் தொகுதிக்கு 02 சீசீடீவீ கெமராக்கள் விநியோகித்து பொருத்துதல்.
- 04ஆம் மாடி நீதிபதிகள் சமாதான அறையின் 07 குளிரூட்டிகளை இடமாற்றுதல்.

3. மனித வளங்கள் அபிவிருத்தி

- அடிப்படை களஞ்சிய முகாமை தொடர்பில் ஊழியர்களுக்கான பயிற்சி
- தனிப்பட்ட கோவைகள் பராமரிப்பு தொடர்பில் ஊழியர்களுக்கான பயிற்சி
- சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களுக்காக ஒழுக்கக் கட்டுப்பாடுகள் தொடர்பில் பயிற்சி
- விலைமனு மதிப்பீடு மற்றும் அறிக்கையிடலுக்கான ஊழியர் பயிற்சி
- (KPIs) இலக்குகளை அடைதல் மற்றும் மேற்பார்வை விருத்தி தொடர்பில் ஊழியர் பயிற்சி
- அரச வாகனத்தை பராமரிப்பதற்கான ஊழியர் பயிற்சி
- சேதம் மற்றும் இழப்புக்கான ஊழியர் பயிற்சி நி.பி. 104
- தாபன விதிக் கோவை மற்றும் நிதி பிரமாணம் தொடர்பில்ஊழியர் பயிற்சி
- இருப்பு சரிபார்ப்புக்கான ஊழியர் பயிற்சி
- மின் பிறப்பாக்கி செயற்பாடுகள் மற்றும் தடுப்பு பராமரிப்புக்கான ஊழியர் பயிற்சி

2022 ஆம் ஆண்டிற்கான அரச உதவுதொகை

* 2022ஆம் ஆண்டுக்காக (228-01-01-01-1503) மீண்டெழும் செலவினத்துக்காக **ரூபாய் 112,370,000.00** தொகையை முற்கொடுப்பனவாக திறைசேரி விடுவித்தது.

* 2022ஆம் ஆண்டுக்காக (228-01-01-01-1509) மீண்டெழும் செலவினத்துக்காக **ரூபாய் 50,950,000.00** தொகையை முற்கொடுப்பனவாக திறைசேரி விடுவித்தது.

* 2022ஆம் ஆண்டுக்காக (228-01-01-01-2201) மூலதனச் செலவினத்துக்காக **ரூபாய் 13,600,000.00** தொகையை முற்கொடுப்பனவாக திறைசேரி விடுவித்தது.

விபரம்	2022 ஆம் ஆண்டிற்கான நிதிகள் ஒதுக்கீடு	2022.12.31 இல் உள்ளவாறு திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற முற்கொடுப்பனவு
மீண்டெழும் செலவினம் - 1503	113,680,000.00	112,370,000.00
மீண்டெழும் செலவினம் - 1509	55,465,000.00	50,950,000.00
மூலதனச் செலவினம் - 2201	20,000,000.00	13,600,000.00

எனது இல. JLO/B/SCCBM/FA/2022/04 திகதி: 2023.05.26

மார்ஷல்

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகள் தேவைப்பாடுகள் தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவுக்கு ஏற்ப கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பலிவுள்ள அபிப்பிராயம்

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்தகைய முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றத்துக்கான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான குறிப்புக்கள், சுருக்கமான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 டிசம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல-மைப்புச் சட்டத்தின் 154(1),பிரிவுடன் சேர்த்து சமமாக வாசிக்கப்படக் கூடிய 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6)ஆம் பிரிவுக்கு ஏற்ப எனது அறிக்கை உரிய காலத்தில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட முனைப்பலிவுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர, சபையின் 2022 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்துக்காக அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதிப்பாய்ச்சல் என்பன இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் சாதாரண நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பலிவுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) முகாமை சபையால் நிதிநிலைமைக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்கள் இல. 01 இல் குறிப்பிடப்பட்ட நிதி நிலைமைக் கூற்று மாதிரியைப் பயன்படுத்தி இருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 07 இன் 65ஆம் பந்திக்கு ஏற்ப சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட் காலத்தை குறைத்து ஒவ்வொரு ஆண்டறிக்கை தயாரிக்கப்படுகின்ற காலம் முடிவடைகின்ற திகதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டி இருந்தும் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதியில் பெறுமானத் தேய்வடைந்து முடிவடைந்திருந்த போதிலும் அதனை மேலும் பயன்படுத்தப்படுகின்ற ரூ. 6,603,245 தொகை பெறுமதியான மின் பாரம் தூக்கி மற்றும் ரூ.851,711 தொகை பெறுமதியான நோயாளி காவு வாகனம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கேற்ப, மதிப்பீடு செய்யப்பட்ட குறைபாடு இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமம் 03 இற்கு ஏற்ப திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த தரநியமத்தில் 49 ஆம் பந்திக்கு ஏற்ப உரிய சொத்து தரத்தை மீள்-கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும்,

மோட்டார் வாகனங்களில் உள்ளடங்கிய மேலே சொல்லப்பட்ட நோயாளர் காவு வண்டி மீள்-மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அதன் மோட்டார் வாகன மீள்-மதிப்பீட்டு மிகை ரூ. 12,500,000.00தொகை நிதிப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டதன் காரணமாக அத்தகைய பெறுமதியில் முதலீட்டுச் செயற்பாடு அத்தகைய பெறுமதியிலிருந்து குறைந்து காணப்பட்டது என்பதோடு மீள்-கணக்கீடு செய்யப்பட்ட மிகைத்தொகைக்கு சமமான தொகை நடவடிக்கைச் செயற்பாட்டின் கீழ் வருடத்தின் குறைபாட்டிற்கு சீர் செய்ததன் காரணமாக அத்தகைய பெறுமதி நடவடிக்கை செயற்பாட்டிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தொகை அதிகமாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 02 இன் 25ஆம் மற்றும் 55ஆம் பந்திகளுக்கு முரணாகவும் மற்றும் நடவடிக்கைச் செயற்பாடுகளுக்கு முரணாகவும் உள்ளது அவதானிக்கப்பட்டது. மீளாய்வுவருடத்தில் ரூ. 119,200,000.00 தொகைக் கான மோட்டார் வாகனம் மற்றும் கட்டடங்கள் நிலுவையை மீள்-கணக்கீட்டு ஒதுக்கீடாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் வெளியேற்றமாக அடையாளம் காணப்பட்டதன் காரணமாக அத்தகைய பெறுமதியில் முதலீட்டு செயற்பாடுகள் குறைவாக இருந்தது. மேலும் மீளாய்வு வருடத்தில் வருமானக் கூற்றினுள் பற்று வருமானமாக ரூ. 132,560,770 தொகை அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் நிதிப் பாய்ச்சல் கூற்றில் நடவடிக்கைச் செயற்பாடுகளின் கீழ் ரூ. 13,360,770 தொகையாக குறைபாட்டை சீர்செய்ததன் காரணமாக ரூ. 119,200,000 தொகை நடவடிக்கைக்குள் பிறப்பிக்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் அதிகரித்து காணப்பட்டது.

(ஈ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 11 இன் 44 ஆம் பந்திக்கு ஏற்ப அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற உதவுதொகைகள் சொத்துக்கள் மற்றும் வருமானமாக அடையாளம் காணப்படவேண்டியிருந்த போதிலும் ரூ. 13,600,000 தொகை மூலதன பெறுகை இந்த கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்ப அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 03 இன் 47ஆம் பந்திக்கு ஏற்ப முந்தைய வருடங்களில் இடம்பெற்ற தவறுகள் கடந்தகால அடிப்படையில் சீர் செய்யப்பட்ட பின்னர் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒப்பீட்டுத் தகவல்களுடன் சரி செய்யப்பட வேண்டுமாக இருந்தபோதிலும், முகாமை சபையினால் அவ்வாறு செய்யாமல் ரூ. 522,420 தொகை முந்தைய வருடத்து தவறு மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் உரிமை மாற்றத்திற்கான கூற்றில் திரண்ட வருமானம் மற்றும் செலவினங்கள் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்ததோடு அது தொடர்பில் தரநியம இல. 03இன் 54 பந்திக்கு ஏற்ப வெளிப்படுத்தல் நிதிக் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 மற்றும் 2022 வருடங்கள் தொடர்பில் ரூ. 204,990 தொகை மதிப்பிடப்பட்ட மாற்றம் மற்றும் நிறுத்தி வைத்த நிதி நீக்குதல் முந்தைய வருடங்களில் தவறாக அடையாளம் காணப்பட்டு மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் உரிமை மாற்றக் கூற்றில் சீராக்கல் செய்யப் பட்டிருந்தது.

(ஊ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 15இன் 14 பந்திக்கு ஏற்ப மிகைத்தொகைகள் அதன் வரவு செலவுத்திட்ட ஆவணத்தில் பெறுமதிகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் என்பவற்றுக்கிடையே ஒப்பீடொன்று அல்லது தனியான நிதிக் கூற்றொன்றாக அல்லது நடைமுறை கால கட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களில் வரவு செலவுத்திட்ட ஆவண நிரல்களாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமாக இருந்த போதிலும் முகாமை சபை அவ்வாறு தயாரித்திருக்கவில்லை.

(எ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 01இன் 80(இ)பந்திக்கு ஏற்ப அறிக்கையிடல் திகதியின் 12 மாதங்களுக்குள் தீர்ப்பனவு வேண்டிய பொறுப்புக்கள், நடைமுறைப் பொறுப்புக்களாக அடையாளம் காணப்படக் கூடியதாக இருக்க வேண்டியிருந்த போதிலும் முகாமை சபையால் பணிக்கொடை ஒதுக்கீடுகளுக்கு உரிய மொத்த பெறுமதியான ரூ. 43,766,240 தொகை நடைமுறைப் பொறுப்பின் கீழ் அடையாளம் காணப்பட்டிருந்தது. அதற்கேற்ப முகாமை சபை பணிக்கொடை ஒதுக்கீட்டை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக தனியாக அறிந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 07இன் 50ஆம் பந்திக்கு ஏற்ப ஒரே தன்மையிலானதும் மற்றும் ஒரே பயன்பாட்டுடையதுமான ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஒன்றுக்கொன்று மாற்றமான வகுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமாக இருந்த போதிலும், அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூ. 22,214,601 தொகை அலுவலக உபகரணங்கள் பெறுமதியில் உள்ளடங்கிய கணனி உபகரணங்களின் பெறுமதி கணிப்பிடப்பட முடியாததாக இருந்தது என்பதோடு இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 20 இன் 17ஆம் பந்திக்கு ஏற்ப மென்பொருள் சொத்தாக குறிப்பிடுவதற்கு பதிலாக பெறுமதி ரூ. 284,400 தொகையான சொத்து, ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஐ) நிதிப் பாய்ச்சல் கூற்றில் நடவடிக்கை செயற்பாடுகளின் கீழ் நிறைவேற்று மூலதன மாற்றத்தில் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் வர்த்தக ரீதியாக கிடைக்கப்பெற வேண்டியவைகளில் மாற்றம் ரூ. 4,312,326 தொகை வெளியேற்றமாக இருந்த போதிலும், அதனை ரூ. 3,173,346 தொகையாக அடையாளம் காணப்பட்டதன் காரணமாக ரூ.1,138,980 தொகை பெறுமதியான நடவடிக்கையினுள் பிறப்பிக்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் குறைந்து காணப்பட்டது.

(ஒ) 2010 ஆம் ஆண்டில் மீள்-மதிப்பீடு செய்யப்பட்ட கட்டடங்கள் மற்றும் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் மீள்-மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு உரிய வருடாந்த பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூ. 119,200,000 தொகை மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் மீள்-மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) கட்டடங்கள் புனர்நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூ. 6,232,227 தொகை மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் நிலையான சொத்துக்கள் கொள்வனவாக அடையாளம் காணப்பட்டதன் காரணமாக சொத்துக்கள் அத்தகைய பெறுமதியால் மிகை மதிப்பீடாக மதிப்பிடப்பட்டிருந்தது என்பதோடு அது தொடர்பில் ரூ. 311,611 தொகை செலவாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருடத்தின் குறைபாடு ரூ. 5,920,616 தொகையால் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(க்) நீதி அமைச்சுக்கு உரியதாக இருந்த டபல் கெப் வாகனம் 2022 மார்ச் 14ஆம் திகதியிலிருந்து மீயுயர் நீதிமன்ற கட்டடங்கள் முகாமை சபையின் மார்ஷல் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது என்பதோடு அதனை 2022 ஆகஸ்ட் 22ஆம் திகதி மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் ரூ. 9,000,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அத்தகைய மதிப்பீட்டுப் பெறுமதி வருமான செலவினக் கூற்றில் வருமானமாக பதிவு செய்வதற்கு பதிலாக மீள்-கணிப்பீட்டு ஒதுக்கீட்டு நிதியக் கணக்கிற்கு பற்று வைத்ததன் காரணமாக மீள்-கணிப்பீட்டு ஒதுக்கீட்டு நிதியம் அத்தகைய தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கு இணங்க என்னால் கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டது. இத்தகைய கணக்காய்வு தரநியமங்களின் கீழ் எனது பொறுப்பானது, இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பலிவுள்ள அபிப்பிராயத் துக்கான அடிப்படையொன்றை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியதாகவும் மற்றும் பொருத்தமானதாகவும் இருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கிய ஏனைய விடயங்கள்

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க் கின்ற சபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக் கூற்றுக்களில் மற்றும் அது தொடர்பான எனது கணக்கறிக்கையின் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் கருத்தாகும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமை பொறுப்பாக வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உட்படுவ தில்லை என்பதோடு நான் அது தொடர்பில் எவ்வித உறுதிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது கணக்காய்வுக்கு உரிய எனது பொறுப்பானது மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கின்ற போது மற்றும் அவ்வாறு செய்கின்ற போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது ஏனைய முறையில் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு ஏற்ப போதியளவில் பொருந்தாமல் உள்ளதா என்பதை அவதானிப்பதாகும்.

சபையின் 2022ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை வாசிக்கின்ற போது, அதில் போதியளவு தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், அதனை நிவர்த்தி செய்வதற்கு நிர்வகிக்கின்ற தரப்பினருக்கு அத்தகைய விடயங்களை அறியப்படுத்த வேண்டும். இதுவரைக்கும் சீராக்கம் செய்யப்படாத தவறாகக் குறிப்பிடப்பட்ட விடயங்கள் இருந்தால், அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6)ஆம் பிரிவுக்கு ஏற்ப என்னால் உரிய காலத்தில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான முகாமையினதும் மற்றும் நிர்வாகிகளினதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்ப தயாரித்தல் மற்றும் சாதாரணமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய போதிய பிறழ் கூற்றுக்கள் இல்லாமல் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமாக இருப்பதற்கு தேவைப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது, சபையை தொடர்ந்து இயக்குவதற்கான இயலுமையைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமை சபையை ஒடுக்குவதற்கு கருத்தில் கொள்வதாயின் அல்லது வேறு மாற்று முறையொன்று இல்லாதவிடத்து நடவடிக்கையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாயின் தவிர, தொடர்ந்தியங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பராமரித்தல் மற்றும் தொடர்ந்தியங்கு வதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமையின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் தொடர்பில் பரீட்சிக்கின்ற பொறுப்பு நிர்வகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவுக்கு ஏற்ப, சபையின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலுமான முறையில் அதன் வருமானம், செவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் பதிவுகள் மற்றும் அறிக்கைகளை பராமரிக்க வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

முழுமையாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் பிழை காரணமாக ஏற்படுகின்ற போதிய பிறழ்கூற்று வெளிப்படுத்தல்கள் அற்றவை என சாதாரண உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது குறிக்கோளாகும். சாதாரண உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாகும் ஆயினும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்ப கணக் காய்வை மேற்கொள்கின்ற போது, அதனை சகல சந்தர்ப்பங்களிலும் போதியளவு பிறழ்கூற்று வெளிப்படுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்தல் இருக்கமாட்டாது. மோசடி மற்றும் பிழை தனியாக அல்லது கூட்டான செல்வாக்கு காரணமாக போதிய பிறழ் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்படலாம் என்பதோடு, அதில் போதிய தன்மை தொடர்பில் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனையாளர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பிலான விளைவு அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்ப, கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் தீர்மானம் மற்றும் துறைசார் அக்கறையுடன் செயலாற்றப் பட்டுள்ளது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்துக்கு அடிப்படையொன்றை வழங்குகின்ற போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய போதிய பிறழ்கூற்றுக்கள் ஏற்படுகின்ற இடர்களை அறிந்து கொள்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக காலோசிதமான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. பிழையாக குறிப்பிடுகின்றதன் காரணமாக ஏற்படு கின்ற போதிய பிறழ்கூற்றுக்களால் ஏற்படுகின்ற விளைவிட மோசடியால் ஏற்படுகின்ற விளைவு அதிகமாக இருப்பது அது கூட்டுச்சதி, போலியான ஆவணங்கள் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதலால், பிழையாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை விட்டுவிடுதல் காரணமாகவாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் தொடர்பில் அபிப்பிராயம் ஒன்றை வெளிப் படுத்துகின்ற எண்ணத்தில் அல்லாமல் இருந்தாலும் காலோசிதமான உரிய கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் தெளிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடு களின் சாதாரண தன்மை மற்றும் முகாமையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல் போற்றப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்குகின்ற கரிசனை தொடர்பில் போதிய நிச்சயமற்ற தன்மைகள் இருக்கின்றனவா என்பது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு சான்றுகளின் அடிப்படையில் கணக் கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கரிசனையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற இருக்கின்றதாக நான் தீர்மானித்தால்,

நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பில் வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்கு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல் போதியதாக இல்லாவிட்டால் எனது அபிப்பிராயத்தை மாற்றம் செய்ய வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் என்பவற்றின் அடிப்படையில் தொடர்ந்தியங்குதல் நிறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு காரணமாக இருந்த கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் உரிய முறையில் மற்றும் சாதாரணமாக உள்ளடங்கியுள்ளதாகவும் மற்றும் வெளிப்படுத்துதல் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் முழுமையான முன்வைத்தல் போற்றப்பட்டது.

எனது கணக்காய்வுக்குள் அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகிகள் தரப்பினருக்கு அறியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்படு கின்ற தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பலிவு செய்யப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடு களுக்கு ஏற்ப, கணக்காய்வுக்கு தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதோடு எனது பரீட்சித்தலிலிருந்து அறிகின்ற முறையில் உரிய நிதி அறிக்கைகளை சபை பராமரித்திருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்ப சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்பமுனைப்பலிவு செய்யப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 1.2.1(ஆ) என்ற அவதானிப்பு தவிர, முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

2.2 பின்பற்றப்பற்ற வழிமுறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் என்பவற்றின் அடிப்படையில் போதிய விடயங்களுக்கு வரையறை செய்வதன் மூலம் கீழ்க் குறிப்பிடுகின்றவற்றைக் குறிப்பிடுவதற்கு எந்த விடயங்களும் என்னால் அவதானிக்கப்பட வில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்ப முகாமையின் நிர்வாக சபை எவரேனும் அங்கத்தவருக்கு சபை தொடர்பில் இணைந்து ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு முறையில் சாதாரண வியாபார நிலைமையிலிருந்து வெளித் தொடர்பு இருத்தல்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அவதானிப்பு தவிர, ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டத்துக்கு அல்லது சபையின் நிர்வாக சபை மூலம் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காமல் செயற்பட்டுள்ளது எனவும் ஆகும்.

சட்டவிதிகள்/ கட்டளைக்கு குறிப்பீடு	அவதானிப்பு
(அ) 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க முத்திரை சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2008 ஆம் ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதியுடைய 1530/13 இலக்க விசேட வர்த்தமானி	ரூ. 25,000 தொகைக்கு மேலதிகமான கொடுப்பனவுக்காக ரூ. 25 தொகைக்கான முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டு மாயினும், 03 சந்தர்ப்பங்களில் ரூ.222,200 தொகைக் கொடுப்பனவுக்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குப் பிரமாணச் சட்டக்கோவை	
(i) நிதி ஒழுங்குவிதி 104(3)(4)	மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் ஏற்பட்ட 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி ஒழுங்குப் பிரமாணம் 104(3) (4)இற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16ஆம் பிரிவு மற்றும் அரச தொழில் முயற்சி சுற்றறிக்கை (PED/12) இன் 6.5.1 ஆம் பிரிவு.	
(ii) நிதி ஒழுங்குவிதி 880	பிணைப்பொறுப்பு கட்டளைச் சட்டத்திற்கு ஏற்ப வைக்கப்பட வேண்டிய அலுவலர்களின் பிணை வைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2021 நொவம்பர் 16ஆம் திகதி 01/2021 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிரூபத்தின் (பொது வியாபாரம் தொடர்பான வழிகாட்டல் கோவை)	
(i) 2.3 ஆம் பந்தியில் அட்டவணை I	சுற்றறிக்கைக்கு ஏற்ப மூலோபாயத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு முகாமை சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.
(ii) 2.3 ஆம் பந்தியில் அட்டவணை I இல் 2	செயல்பாட்டுத் திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய மூலோபாய, நிலையான செயற் பாடுகள் மற்றும் அத்தகைய செயற்பாடு களை மேற்கொள்கின்ற பொறுப்புக்கு உட்படுகின்ற ஆட்கள் மற்றும் எதிர்பார்க்கப் படுகின்ற நிதி மதிப்பீடுகளுக்காக கால வரையறை ஒன்றுடன் உரிய அலுவலர்களை உறுதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.
(iii) 2.3 ஆம் பந்தியில் அட்டவணை I இல் 3	பிரதான வரவு செலவுத் திட்ட ஆவணத் திற்கு சேர்க்கப்பட வேண்டிய எதிர்வு கூறப் பட்ட வருமானக் கூற்று, எதிர்வு கூறப்பட்ட நிதி நிலைமைக் கூற்று மற்றும் எதிர்வு கூறப்பட்ட நிதிப் பாய்ச்சல் கூற்று என்பவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, சபையின் அதிகாரம், கடமை மற்றும் பணிகள் என்பவற்றுக்கு இணங்காமல் செயற்பட்டுள்ளமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, சபையின் வழங்கள் சிக்கனமாக, செயற்றிறனாக மற்றும் பயன்விளைவுள்ள முறையில் குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரிய சட்டவிதி களுக்கு அமைவாக பொருள் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை எனவும் ஆகும்.

பொருள் பெறுகை வழிகாட்டல் ஆவணத்தின் 4.2.2 பிரிவுக்கு ஏற்ப, ஒவ்வொரு பொருள் பெறுகை செயன்முறையிலும் படிமுறைகளைக் குறிப்பிட்டு பொருள்பெறுகை நேரசூசி ஒன்று பொருள்பெறுகை குழுவினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்தும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 10,696,664 பொருள்பெறுகைக்கான பொருள் பெறுகை நேரசூசி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) முகாமை சபையின் அனுமதிக்கப்பட்ட ஊழியர்கள் 180 ஆக இருந்த போதிலும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 08 பதவிகளின் 40 ஊழியர்கள் குறைபாடாக காணப்பட்டது. அதற்கேற்ப, முகாமை சபையின் ஊழியர்களில் நடைமுறை நிலை-மைக்கு ஏற்ப, தயாரிப்பதற்கோ அனுமதிக்கப்பட்ட பதவிகளை பூர்த்தி செய்வதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) லக்திவ இன்ஜினியரிங் தனியார் நிறுவனத்தினால் 2022 ஜனவரி 10 ஆம் திகதி ரூ. 690,091 தொகை மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என்பதோடு 2022 மார்ச் மாதம் 03ஆம் திகதியுடைய கடிதத்தின் மூலம் அதற்காக நீதி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப் பட்டிருந்தது. ஆயினும், 2022 ஜூலை மாதம் 04 ஆம் திகதி மீயுயர் நீதிமன்ற கட்டடங்கள் முகாமை சபை மூலம் லக்திவ இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திற்கு ஏற்ப அத்தகைய புதுப்பித்தலை ரூ. 910,417 தொகை பெறுமதிக்கு வழங்கப் பட்டிருந்தது. 2022 மே மாதம் 05 ஆம் திகதி உரிய சேவை நிறுவனத்தின் மூலம் ரூ.910,417 தொகைக்கு கேள்வி மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பிடப் பட்டிருந்த போதிலும் அத்தகைய கேள்விமனு விலை உள்ளடங்கிய கடிதத்தை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. என்பதோடு ரூ. 910,417 தொகை பெறுமதிக்கு நீதி அமைச்சின் அனுமதியும் பெறப் பட்டிருக்கவில்லை. முகாமை சபை மூலம் இத்தகைய புதுப்பித்தல் நடவடிக்கை தாமதமாகியதால் மொத்தச் செலவு ரூ.220,326 தொகையால் அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் இறுதித்தினத்தில் இருந்த மொத்தம் ரூ. 2,634,213 தொகை கடன் பட்டோர் நிலுவைகளில், 30 நாட்கள் கடந்த நிலுவை ரூ. 1,489,556 ஆக இருந்தது. அதுமொத்த கடன்பட்டோர் நிலுவையின் 57 சதவீதம் ஆகும் என்பதோடு இந்த நிலுவைக்குள் 03 வருடங்கள் கடந்த ரூ. 215,799 தொகை கடன்பட்டோர் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஈ) முகாமை சபையின் பாதுகாப்பு மற்றும் பொறியியல் பிரிவு ஊழியர்களுக்காக வெளிவாரி தரப்பினர் ஒருவரிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப் பட்ட கட்டடம் ஒன்றுக்காக உரிய வாடகை உடன்படிக்கை 2022 ஆகஸ்ட் 04ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தது என்பதோடு உடன்படிக்கையை கைச்சாத்திடுகின்ற போது கட்டட உரிமையாளருக்கு வைப்புச் செய்யப்பட்ட 03 மாத வாடகை ரூ.1,350,000 தொகை 2023 மார்ச் 20 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2022ஆம் வருட வரவு செலவுத்திட்டத்திற்கு ஏற்ப வரவு செலவுத்திட்ட வருமானம் ரூ.22,055,000 தொகையாக இருந்த போதிலும், உண்மை வருமானம் 16,948,589 தொகையாக இருந்தது என்பதோடு ரூ. 5,106,411 தொகை வித்தியாசம் அவதானிக்கப் பட்டது. வரவு செலவுத்திட்ட வருமானத்தை விடவும் உண்மை வருமானம் 23 சதவீதத்தினால் குறைந்துள்ளது என்பதோடு எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதற்கு முகாமை சபையினால் முடியாமல் போயுள்ளது.

(ஊ) 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட மீண்டெழும் செலவினங்களில் 06 வகை செலவினங் களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 115,878,000 தொகையாக இருந்த போதிலும் உண்மையான செலவு ரூ. 129,722,866 தொகையாக இருந்து மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்தை விடவும் ரூ. 13,844,866 தொகை மேலதிகமாக செலவிடப் பட்டிருந்தது.

கையொப்பம்
டப்ளியூ.பீ.சீ. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

SCC/FIN/FINAL/2022 08 பெப்ரவரி 2023

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல.

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையின் ஆண்டறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் - 2022

2004.02.24 ஆம் திகதியுடைய 2004/01 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 06ஆம் பந்திக்கு ஏற்ப, 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையின் ஆண்டறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் 2023, ஜனவரி 24 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் முகாமை சபையினால் அங்கீகரிக்கப்பட்டது என்பதோடு உரிய நடவடிக்கைக்காக அவற்றை இதனுடன் இணைக்கப்படுகின்றது.

மேஜர் ஜெனரல் டப்ளியூ.டீ.எல்.பீ. விக்ரமசிங்க (ஓய்வுபெற்றவர்),
மார்ஷல்/பிரதம நிறைவேற்று அதிகாரி,
மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை.

பிரதி : பிரதம கணக்காளர்,
நீதியமைச்சு, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கள்,
இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத,
கொழும்பு 10.

அரச கணக்குகள் திணைக்களம்,
நிதியமைச்சு,
கொழும்பு 01.

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

2022 டிசம்பர் 31இல் உள்ளவாறான ஐந்தொகை

	குறிப்பு	2022		2021	
		ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்
சொத்துக்கள்:					
நடைமுறை அல்லாத சொத்துக்கள்					
ஆதனம் பொறித் தொகுதி மற்றும் இயந்திராதிகள்	**01**	5,860,544,731	**5,860,544,731**	5,970,431,260	**5,970,431,260**
நடைமுறை அல்லாத சொத்துக்கள்					
பயன்பாடுகள் மற்றும் ஏனையவற்றிற்கு வைப்புக்கள்	**3 -அ**	7,495,250		6,145,250	
கிடைக்கப்பெற வேண்டிய இடர் கடன்கள்	**3 -ஆ-2**	2,776,328		2,959,693	
			10,271,578		**9,104,943**
நடைமுறை சொத்துக்கள்					
இருப்புக்கள்	**02**	8,816,544		7,219,591	
பெறப்பட வேண்டிய இடர் கடன்	**3 -ஆ-2**	2,013,835		2,041,490	
பெறப்பட வேண்டிய வர்த்தகம் மற்றும் ஏனையவை	**3-ஆ. இ**	2,657,763		6,970,089	
முற்-கொடுப்பனவுகள்	**04**	81,480		80,892	
காசும் காசுக்கு சமமானவைகளும்	**05**	14,486,082		9,419,462	
			28,055,704		**25,731,524**
மொத்த சொத்துக்கள்			**5,898,872,013**		**6,005,267,727**
பொறுப்புக்கள்:					
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்					
திரண்ட மூலதன உதவு தொகை	**10**	124,864,917		124,625,689	
திரண்ட வருமானம்	**11**	(8,139,958)		(6,217,038)	
மீள்மதிப்பீட்டு ஒதுக்க நிதியம்	**12**	5,728,922,708		5,835,622,708	
			5,845,647,667		**5,954,031,360**
நடைமுறைப் பொறுப்புக்கள்:					
வர்த்தகம் மற்றும் திரண்ட செலுத்தப்பட வேண்டியவைகள்	**6 -அ,ஆ**	8,860,044		3,570,510	
ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள்	**6 -அஆ.இ**	44,364,302		47,665,857	
			53,224,346		**51,236,367**
மொத்த பொறுப்புக்கள்			**5,898,872,013**		**6,005,267,727**

2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு தரநியமங்களுடன் இணங்குகின்றன என இத்தால் நாம் சான்றுப்படுத்துகின்றோம்.

மேஜர் ஜெனரல் டப்.டீ.எல்.பீ. விக்ரமசிங்க (ஓய்வு பெற்ற)
மார்ஷல்
மீயுயர் நீதிமன்றங்கள் கட்டடத் தொகுதி முகாமை சபை

கே.ஏ.டீ.யூ.பீரிஸ்
நிதி முகாமையாளர்
மீ.உ.நீ.ம.க.தொ.மு.ச

இத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்வைப்பதற்கான பொறுப்பு மீயுயர் நீதிமன்றங்கள் கட்டடத் தொகுதி முகாமை சபையினதாகும்.

மீயுயர் நீதிமன்றங்கள் கட்டடத் தொகுதி முகாமை சபைக்காகவும் அதன் சார்பிலும் அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டது.

கௌரவ வீ.கே. மலல்கொட சனாதிபதி சட்டத்தரணி
சபை அங்கத்தவர்
உயர் நீதிமன்ற நீதிபதி

திரு. சுகத் கல்தெரா
சபை அங்கத்தவர்
சட்டத்தரணி.

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை
2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கணக்கு

	குறிப்பு	2022 ரூ.	2021 ரூ.
வருமானம்:			
மீண்டெழும் அரச உதவித் தொகை		*163,320,000*	*162,641,000*
ஏனைய செயற்பாட்டு வருமானம்	*07*	*16,948,589*	*16,736,693*
ஒத்திவைக்கப்பட்ட வருமானத்துக்கு மாற்றப்பட்ட தொகை	*01*	*132,560,770*	*126,356,875*
கழிக்க - செலவினம்			
ஊழியர்களுக்கான செலவினங்கள்	*08*	*(103,506,950)*	*(104,698,979)*
பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு செலவினங்கள்	*01*	*(132,560,770)*	*(126,356,875)*
ஏனைய நடவடிக்கை செலவினங்கள்	*09*	*(78,242,388)*	*(67,958,400)*
செலவினம் மீதான வருமானத்தின் குறைவு		*(1,480,748)*	*6,720,314*
செலவினம் மீதான தேறிய நட்டம்		*(1,480,748)*	*6,720,314*

குறிப்பு : 01

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் :-

பதிவுப் புத்தகம்	2022.01.01 இல் உள்ளவாறானது	குறிப்பிட்ட வருடத்தில் சேர்க்கப்பட்டவை	முன்னைய வருடம் தொடர்பான சீராக்கல்கள்	குறிப்பிட்ட வருடத்தில் அகற்றுதல்	உள்ளவாறானது 31.12.2022
	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்
காணி	4,788,000,000	-	-	-	4,788,000,000
கட்டங்கள்	2,481,257,659	6,232,227	-	-	2,487,489,886
மோட்டார் வாகனங்கள்	2,781,711	12,500,000	-	1,930,000	13,351,711
அலுவலக தளபாடங்கள் பொருத்துதல்கள்	18,387,374	155,904	-	4,354,519	14,188,759
அலுவலக உபகரணங்கள்	6,672,825	2,414,742	-	1,189,977	7,897,590
கருவிகள் மற்றும் உபகரணங்கள்	367,635	81,474	-	175,666	273,443
பாதுகாப்பு உபகரணங்கள்	669,949	-	-	66,373	603,576
இணைப்புக்கள் மற்றும் பொருத்திகள்	300,074	-	-	171,822	128,252
கணினி மென்பொருள்	284,000	-	-	-	284,000
அலுவலகப் பராமரிப்பு உபகரணங்கள்	2,791,553	-	-	223,744	2,567,809
பொறித்தொகுதி மற்றும் இயந்திரம்	119,507,083	1,812,317	-	51,265,404	70,053,996
மேம்பாடு - பாரம் தூக்கி	6,603,245	-	-	-	6,603,245
P.A.B.X. முறைமை	5,297,770	-	-	-	5,297,770
P.A. மற்றும் பதிவு முறைமை	3,181,072	-	-	3,160,761	20,311
மனித வள முகாமை	522,420	-	(522,420)	-	-
	7,436,624,370	23,196,664	(522,420)	62,538,266	7,396,760,348

திரண்ட பெறுமானத்தேய்வு	2022.01.01 இல் உள்ளவாறானது	குறிப்பிட்ட வருடத்தில் சேர்க்கப்பட்டவை	முன்னைய வருடம் சீராக்கல்கள்	குறிப்பிட்ட வருடத்தில் அகற்றுதல்	உள்ளவாறானது 31.12.2022
	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்
கட்டடங்கள்	1,362,090,580	117,212,365	-	-	1,479,302,945
மோட்டார் வாகனங்கள்	2,781,708	3,125,000	-	1,930,000	3,976,708
அலுவலக தளபாடங்கள் பொருத்துதல்கள்	6,679,188	1,773,594	-	4,354,519	4,098,263
அலுவலக உபகரணங்கள்	2,550,608	987,199	-	1,189,977	2,347,830
கருவிகள் மற்றும் உபகரணங்கள்	199,608	68,360	-	175,666	92,302
பாதுகாப்பு உபகரணங்கள்	435,574	150,894	-	66,373	520,095
இணைப்புக்கள் மற்றும் பொருத்திகள்	520,870	16,031	-	171,822	365,079
கணினி மென்பொருள்	189,333	94,666	-	-	284,000
அலுவலகப் பராமரிப்பு உபகரணங்கள்	1,224,738	320,976	-	223,744	1,321,970
பொறித்தொகுதி மற்றும் இயந்திரம்	74,547,849	8,756,749	-	51,265,404	32,039,194
மேம்பாடு - பாரம் தூக்கி	6,603,245	-	-	-	6,603,245
P.A.B.X. முறைமை	5,195,778	52,398	-	-	5,248,176
P.A. மற்றும் பதிவு முறைமை	3,174,031	2,538	-	3,160,761	15,808
	1,466,193,109	132,560,770	-	62,538,266	1,536,215,615
பதிவு செய்யப்பட்ட பெறுமதி	**5,970,431,261**				**5,860,544,731**

முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்:-

2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டு

(1) நிதி அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்ப தயாரித்து முன்வைக்கப்படுகின்றன.

(2) பணவீக்க காரணிகளுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(3) ஒத்திவைக்கப்பட்ட வருமானமாக, குறிப்பிட்ட வருடத்துக்கான பெறுமானத் தேய்வுக்கு சமமான ஒரு தொகை திரண்ட மூலதனக் கணக்கிலிருந்துவருமான செலவினக் கணக்குக்கு மாற்றப்பட்டது.

இருப்புக்களின் மதிப்பீடு

(4) இருப்புக்கள் கிரயத்தின் கீழ் விலை மற்றும் தேறிய மீட்கக் கூடிய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

கடன்பட்டோர்

(5) கடன்பட்டோர் அவர்களின் மதிப்பிடப்பட்ட செலுத்தக்கூடிய பெறுமதியைக் குறிப்பிட்டுள்ளனர் என்பதோடு அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன் என்பவற்றுக்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படவில்லை.

பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

(6) இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் நிபந்தனைகளுக்கு ஏற்ப ஓய்வு பெறுபவர்களுக்கான பணிக்கொடையானது நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பொறுப்பானது வெளிவாரியாக நிதிப்படுத்தப்படவில்லை.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

(7) இறையிலி நிலம் தவிர்ந்த ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு திரண்ட பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட கிரயத்தில் பதிவு செய்யப்பட்டு, அவை பெறுமானத் தேய்வு என்ற தலைப்பின் கீழ் விபரிக்கப்படுகின்ற அடிப்படையில் வழங்கப்படு கின்றது. இறையிலி நிலங்கள் மதிப்பீட்டில் கணக்குகளில் சேர்க்கப்படுகின்றது.

பெறுமானத்தேய்வு :-

(8) இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு அதன் கிரயத்தில் பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடுகள் கணிப்பிடப் பட்டுள்ளன. கொள்வனவு மற்றும் விற்பனைத் திகதிகளில் முழுமையான ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பெறுமானத் தேய்வு பின்வரும் வீதங்களில் கணிக்கப்படுகின்றன :

கணக்குகள்	**வீதம்** (%)
01 கட்டிடங்கள்	05.00 வீதம்
02 மோட்டார் வாகனங்கள்	25.00 வீதம்
03 பொறி மற்றும் இயந்திரங்கள்	12.50 வீதம்
04 இணைப்புக்கள் மற்றும் பொருத்திகள்	12.50 வீதம்
05 காரியாலய தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்	12.50 வீதம்
06 அலுவலக உபகரணங்கள்	12.50 வீதம்
07 கருவிகளும் உபகரணங்களும்	25.00 வீதம்
08 பாதுகாப்பு உபகரணங்கள்	25.00 வீதம்
09 அலுவலகத்தை பராமரிக்கும் உபகரணங்கள்	12.50 வீதம்
10 கணினி மென்பொருள்	33.1/3 வீதம்
11 தொலைபேசி முறைமை	12.50 வீதம்
12 தொலைபேசி பதிவு செய்தல் முறைமை	12.50 வீதம்
13 பாரம் தூக்கி மேம்படுத்தல்	12.50 வீதம்

குறிப்பு : 02

கையிருப்பு:

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வருடாந்த இருப்புக்கள்

குறியீட்டு இலக்கம்	விபரம்	வருடம் 2022 ரூபாய்	வருடம் 2021 ரூபாய்
A 0001-0177	குளிரூட்டிக்கான உதிரிப்பாகங்கள்	**1,558,645**	**1,768,530**
B 3751-3796	பித்தளை மற்றும் இரும்புப் பொருத்திகள்	**111,622**	**144,238**
C 6001-6114	பீ.ஏ.முறைமை (தொடர்பாடல்) உதிரிப்பாகங்கள்	**47,928**	**47,934**
C 7001-7075	பீ.ஏ.முறைமை (தொடர்பாடல்) உதிரிப்பாகங்கள்	**319,834**	**290,106**
E 2001-2360	மின்சாரப் பொருட்கள்	**2,303,525**	**1,383,087**
G 1501-1557	மின் பிறப்பாக்கி பொருட்கள்	**126,105**	**98,873**
H 2501-2612	சுத்திகரிக்கின்ற பொருட்கள்	**451,619**	**236,906**
L 1001-1107	பாரம்தூக்கி உதிரிப்பாகங்கள்	**-**	**801,453**
M 4601-4629	நானாவிதப் பொருட்கள்	**93,500**	**3,230**
N 4200-4289	ஆணி மற்றும் நட்டுகள்	**67,917**	**74,496**
O 4501-4518	லுப்ரிகன்ட் வகைகள்	**607,242**	**20,508**
P 3400-3675	குழாய்களும் பொருத்திகளும்	**596,726**	**446,059**
S 3001-3194	காகிதாகிகள்	**1,080,791**	**719,875**
T 4001-4192	பொறியியல் பொருட்கள் (தொழில்நுட்பம்)	**630,534**	**488,100**
W 0501-0607	நீர்ப் பம்பி உதிரிப்பாகங்கள்	**198,119**	**198,610**
X 4300-4344	பித்தளை திருகாணிகள்	**43,214**	**27,377**
Y 4401- 4477	நிறப்பூச்சுக்கள்	**579,223**	**470,210**
2022.12.31 இல் உள்ளவாறான மொத்த இருப்பு		**8,816,544**	**7,219,591**

குறிப்பு 03

(அ) கிடைக்கப் பெற வேண்டியவைகள் - பயன்பாடுகளுக்கான வைப்புக்கள்

புத்தகக் கணக்கு	வாடிக்கையாளர் பெயர்	விபரம்	வருடம் 2022 ரூபாய்	வருடம் 2021 ரூபாய்
மின்சாரப் பட்டியல்கள் - வைப்புக்கள்	இலங்கை மின்சார சபை	ஊழியர் விடுதிகள் (161/31)	650.00	650.00
மின்சாரப் பட்டியல்கள் - வைப்புக்கள்	இலங்கை மின்சார சபை	ஊழியர் விடுதிகள் (161/31) A	650.00	650.00
மின்சாரப் பட்டியல்கள் - வைப்புக்கள்	இலங்கை மின்சார சபை	ஊழியர் விடுதிகள் (161/34)	650.00	650.00
மின்சாரப் பட்டியல்கள் - வைப்புக்கள்	இலங்கை மின்சார சபை	ஆரச்சி விடுதிகள்	250.00	250.00
மின்சாரப் பட்டியல்கள் - வைப்புக்கள்	இலங்கை மின்சார சபை	திருமணம் முடிக்காதவர்களின் வாசஸ்தலங்கள்	3,500.00	3,500.00
மின்சாரப் பட்டியல்கள் - வைப்புக்கள்	இலங்கை மின்சார சபை	நீதிபதிகள் வாசஸ்தலங்கள்	13,500.00	13,500.00
மின்சாரப் பட்டியல்கள் - வைப்புக்கள்	இலங்கை மின்சார சபை	நீதிமன்றங்கள் கட்டடத் தொகுதி	5,678,750.00	5,678,750.00
மின்சாரப் பட்டியல்கள் - வைப்புக்கள்	இலங்கை மின்சார சபை	பீசீசி மனை	392,000.00	392,000.00
நீர்ப் பட்டியல்கள் - வைப்புக்கள்	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை	நீர் விநியோகத்திற்காக	300.00	300.00
போக்குவரத்து (எரிபொருள்) - வைப்புக்கள்	சிலிப்டு ஏஜன்சீஸ் (பிரைவேட்) லிமிடெட்	எரிபொருள் விநியோகத்திற்காக	50,000.00	50,000.00
தொலைபேசி பட்டியல்கள் - வைப்புக்கள்	சிறீ லங்கா டெலிகொம்	தொலைபேசி இணைப்புக்காக	5,000.00	5,000.00
தங்குமிட - வைப்புக்கள்	எம்.எச் ஜமால்டீன்	பாதுகாவலர் அறைக்காக	1,350,000.00	-
			7,495,250.00	**6,145,250.00**

(ஆ) <u>பெறப்பட வேண்டியவைகள் - வர்த்தகக் கடன் பட்டோர்கள் மற்றும் ஏனையவைகள்</u>

இல.	புத்தகக் கணக்கு	வாடிக்கையாளர் பெயர்	விபரம்	2022 ரூபாய்	2021 ரூபாய்
	<u>வர்த்தகக் கடன்பட்டோர்கள்</u>				
	பாதுகாப்புக்காக				
1	பாதுகாப்பு சேவைகளின் ஏற்பாடு - நானாவித கடன்பட்டோர்கள்	இலங்கை நீதிபதிகள் நிறுவகம்	2022 ஒக், நொ. டிச. மாதங்களுக்கான பாதுகாப்பு கட்டடம் B132:D141ணங்கள்	166,572.56	55,524.14
2	சட்டவரைஞர் திணைக்களம் - நானாவித கடன் பட்டோர்	சட்டவரைஞர் திணைக்களம்	பாதுகாப்பு கட்டணங்கள் 15.07.2022 முதல் 31.12.2022	1,108,129.50	199,703.50
3	மீஉநீ மன்றங்களின் அலுவலர்கள் தங்குமில்லங்கள் வாடகை - நானாவித கடன் பட்டோர்கள்	மத்தியஸ்த சபை	2022.01.01-2022.02.17 மத்தியஸ்த சபைக்கு வழங்கிய பாதுகாப்புக்கான கட்டணங்கள்	154,388.46	-
	<u>மீயுயர் நீதி மன்றங்கள் கட்டடத் தொகுதி வாடகை</u> :-				
1	விசேட மேல் நீதிமன்றங்களுக்கான வாடகை	விசேட மேல் நீதிமன்றங்கள் 211	கட்டட வாடகை	948,387.10	6,340,000.00
2	நீதிபதிகள் தங்குமில்லங்கள்	நீதிபதிகள் தங்குமில்லம்	2022 டிசம்பர் இற்கான உயர் நீதிமன்றத்திற்கான தங்குமில்ல வாடகை	13,747.60	82,350.00
3	ஆரச்சி தங்குமில்லத்திற்கான வாடகை	ஆரச்சி தங்குமில்லம்	2022 டிசம்பர் ஆரச்சி தங்குமில்ல வாடகை	-	1,924.00
4	சட்டத்தரணிகள் சிற்றுண்டிச் சாலைக்கான வாடகை	டேஸ்ட் ஒப் ஏசியா	2022 டிசம்பர் சட்டத்தரணி சிற்றுண்டிச்சாலை வாடகை	10,000.00	10,000.00
5	வாகன தரிப்பு கட்டணங்கள்	ஏனையவை	2022 டிசம்பர் வாகனம் தரித்தல் கட்டணங்கள்	5,950.00	-
மொத்த வர்த்தகக் கடன்பட்டோர்				**2,407,175.22**	**6,689,501.64**

(இ)

ஏனைய பெறப்பட வேண்டியவைகள்				
புத்தகக் கணக்கு	**வாடிக்கையாளர் பெயர்**	**விபரம்**	**2022**	**2021**
			ரூபாய்	ரூபாய்
சம்பளங்கள் மற்றும் கூலிகள் (நானாவித கடன்பட்டோர்கள்)	நானாவிதம் - பீ.யு.டீ. பண்டார (396)	மரணம்	11,238.02	11,238.02
சம்பளங்கள் மற்றும் கூலிகள் (நானாவித கடன்பட்டோர்கள்)	நானாவிதம் - திரு. பீ.ஏ.கே. கானாநாத் (368)	திரு. கானாநாத் என்பவரிடமிருந்து பெறப்பட வேண்டிய - சம்பளம் மிகைக் கொடுப்பனவு	215,799.63	215,799.63
			227,037.65	**227,037.65**
உற்சவ முற்பணம்	உற்சவ முற்பணம் - குறிப்பு 3ஆ-1	பெறப்பட வேண்டிய உற்சவ முற்பணம்	18,750.00	48,750.00
இடர் கடன்	இடர்கடன் - குறிப்பு 3ஆ-2	பெறப்பட வேண்டிய இடர் கடன்	4,790,163.43	5,001,182.85
விசேட முற்பணம்	விசேட கடன் - குறிப்பு 3ஆ-3	பெறப்பட வேண்டிய விசேட கடன்	4,800.00	4,800.00
	ஏனைய பெறப்பட வேண்டிய வைகளின் மொத்தம்		**4,813,713.43**	**5,054,732.85**

குறிப்பு 04 :-

முற் கொடுப்பனவு :-

முற்பணக் கொடுப்பனவுகள்

புத்தகக் கணக்கு	**விநியோகத்தர் பெயர்**	**விபரம்**	**2022**	**2021**
			ரூபாய்	ரூபாய்
ஏனைய சேவைகள் - முற்பணக் கொடுப்பனவு	நானாவிதம்	2023 இற்கு கே.டப்.டீ.ஆர்.வெரகம (அங்கத்துவக் கட்டணம்)	5,880.00	5,292.00
ஏனைய சேவைகள் - முற்பணக் கொடுப்பனவு	கொழும்பு மாநகர சபை	2023 இற்கான வரிகள்	75,600.00	75,600.00
			81,480.00	**80,892.00**

குறிப்பு 05 :-

<u>காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்</u> :-

	2022	**2021**
	ரூபாய்	ரூபாய்
இலங்கை வங்கி - புதுக்கடை (நடைமுறை கணக்கு) கணக்கிலக்கம் 1369773	14,486,082.09	9,419,461.53
	14,486,082.09	**9,419,461.53**

குறிப்பு 06 :-

ஏனைய செலுத்தப்பட வேண்டிய தொகைகள் :-

(அ) நானாவித கடன் கொடுத்தோர்கள்

நானாவித கடன் கொடுத்தோர்கள்	விநியோகத்தரின் பெயர்	விபரம்	2022 ரூபாய்	2021 ரூபாய்
பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் கொள்வனவு மீஉ.நீ	க்ராப்ட் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்	சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் - (2021/V303) 02 குளிரூட்டி இயந்திரங்கள் கொள்வனவு	27,352.50	27,352.50
பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் கொள்வனவு	ப்ரொஸ்ட்எயார் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டட்	குளிரூட்டி தொகுதியொன்று கொள்வனவு	-	9,010.00
பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் கொள்வனவு	மெட்ரோபொலிடன் டெக்நொலொஜீஸ் (பிரைவேட்) லிமிட்டட்	வெளிவாரி சீசீடீவீ கெமரா விநியோகம் மற்றும் பொருத்துதல் (2021/V1198)	215,683.20	215,683.20
பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் கொள்வனவு	டெலிசொனிக் லங்கா	பிளவு வகை குளிரூட்டி இயந்திரம் 01 பொருத்துதல்	-	13,398.85
பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் கொள்வனவு	டெலிசொனிக் லங்கா	பிளவு வகை குளிரூட்டி இயந்திரங்கள் 02 பொருத்துதல்	-	29,911.41
பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் கொள்வனவு	மெட்ரோபொலிடன் டெக்நொலொஜீஸ் (பிரைவேட்) லிமிட்டட்	சீசீடீவி 10% சதவீத சேமிப்பகம் விநியோகம் மற்றும் பொருத்துதல் (2022/V309)	42,299.41	-
	மொத்தம்		**285,335.11**	**295,355.96**
காணி கட்டடம் கொள்வனவு மீஉ.நீ.	சசி இன்பெக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	பதிவு அறை கட்டடத்தில் மல சல கூட திருத்தம் (2019/V236)	10,112.50	10,112.50
காணி கட்டடம் கொள்வனவு மீஉ.நீ.	சத்மின கன்ஸ்டரக்ஷன்	மீஉ.நீ கட்டடங்களின் திருத்த வேலைகள்	-	3,025.50
	சத்மின கன்ஸ்டரக்ஷன்	மீஉ.நீ கட்டடங்களின் திருத்த வேலைகள்	-	2,413.00
காணி கட்டடம் கொள்வனவு மீஉ.நீ.	எஸ்.எம்.எஸ். ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டட்	161/35,161/34 கட்டடங்களுக்கு புலொக் கல் பதிவு செய்தல்	-	11,844.77
காணி கட்டடம் கொள்வனவு மீஉ.நீ.	சத்மின கன்ஸ்டரக்ஷன்	உயர் நீதிமன்ற மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றம் ஆகிய வற்றின் நீதிபதிகளுக்காக நீதிபதிகளின் புதிய சமாதான அறை திருத்தம் மற்றும் நிறப்பூச்சடித்தல் (2021/V280)	28,619.11	28,619.11
காணி கட்டடம் கொள்வனவு மீஉ.நீ.	செதும்டி பில்டர்ஸ்	மீஉநீ. கட்டடத்தின் 4ஆம் மற்றும் 5ஆம் மாடிகளின் அலுமினியம் பாகப்பிரிப்பு (2021/V312)	19,409.88	19,409.88
	செதும்டி பில்டர்ஸ்	161/31 பாதுகாப்பு முகாமையாளரின் தங்குமில்லத்தை திருத்தல் மற்றும் நிறப்பூச்சடித்தல்	-	58,750.58
காணி கட்டடம் கொள்வனவு உ.நீ.	அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்	பதிவு அறையின் கூரை திருத்த வேலை - தக்கவைத்தல் 5 சதவீதம் (2022/V609)	91,471.14	-
காணி கட்டடம் கொள்வனவு உ.நீ.	அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்	நீதிபதிகளின் மாடிக் கட்டடத்தில் நீர்க்கசிவை திருத்துதல் தக்கவைத்தல் 5% (2022/V1101)	161,691.75	-
காணி கட்டடம் கொள்வனவு உ.நீ.	அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்	நீதிபதிகள் மாடிக் கட்டடத்தின் மேலதிக வேலை DPC 2022/11	236,808.00	-
	மொத்தம்		**548,112.38**	**134,175.34**

நானாவித கடன் கொடுனர்கள்	விநியோகத்தர் பெயர்	விபரம்	2022 ரூபாய்	2021 ரூபாய்
உநீ திருத்தம் மற்றும் பராமரிப்பு	முனசிங்க பில்டர்ஸ் என்ட் கன்ஸ்டர்க்டர்ஸ்	மீஉநீ பிரதான மண்டபத்தை திருத்துதல்	-	1,200.00
உநீ திருத்தம் மற்றும் பராமரிப்பு	சத்மின கன்ஸ்டரக்ஷன்	மீஉநீ திருத்தம் மற்றும் பராமரிப்பு	-	2,663.00
		சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தற்கான வாகன தரிப்பிட கூரை நிர்மாணித்தல் (2020/V489)	8,389.25	8,389.25
	மொத்தம்		**8,389.25**	**12,252.25**
உயர் நீதிமன்றம் காணி மற்றும் கட்டடங்களின் புனர்நிர்மாணம்	முனசிங்க பில்டர்ஸ் என்ட் கன்ஸ்டர்க்டர்ஸ்	திருத்தம் மற்றும் புதுப்பித்தல்	-	6,000.00
உநீ காணி மற்றும் கட்டடங்களின் புனர்நிர்மாணம்	சத்மின கன்ஸ்டரக்ஷன்	7/86 நீதிபதி தங்குமில்லத்தை திருத்தி நிறப்பூச்சடித்தல்	-	31,564.10
மீஉநீ காணி மற்றும் கட்டடங்களின் புனர்நிர்மாணம்	செதும்டி பில்டர்ஸ்	86/8 நீதிபதிகள் தங்குமில்லத்தை திருத்தி நிறப்பூச்சடித்தல்	-	29,831.56
	செதும்டி பில்டர்ஸ்	161/34 மெஸ் தங்குமில்லத்தை திருத்தி நிறப்பூச்சடித்தல்	-	44,022.88
	மொத்தம்		**-**	**111,418.54**
உநீ கட்டடங்களின் பராமரிப்பு	பிரீமியம் கன்ஸ்டரக்ஷன் என்ட் கன்சல்டன்டஸ்	மீஉநீ. நீதிபதிகள் மாடியின் கூரைப்பீலியை திருத்துதல் (2020/V489)	902.25	902.25
